செ.வெ.எண் :24/ஜனவரி நாள்:21.01.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## 72 மணி நேரத்தில் 30 இலட்சம் விதைப் பந்துகள் உருவாக்கும் நிகழ்வு

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் துவக்கம்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நேஷனல் அகாடமி பள்ளியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மார்ட்டின் சேரிடபிள் டிரஸ்ட் அமைப்பு ஒருங்கிணைந்து மாவட்டத்தில் பசுமைப் புரட்சியினை ஏற்படுத்திடும் நோக்கில் "72 மணி நேரத்தில் 30 இலட்சம் விதைப்பந்துகள்" உருவாக்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் துவங்கியது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் உத்தரவின்படி, இந்திய அளவில் சிறப்பு கவனம் செலுத்தக்கூடிய மாவட்டங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ள மாவட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டமும் ஒன்றாகும். அதனடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் கல்வி வளர்ச்சி, பொது சுகாதார மேம்பாடு, வேளாண்மை மற்றும் நீர்ப்பாசன மேம்பாடு, அடிப்படை உட்கட்டமைப்பு வசதி மேம்பாடு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி மேம்பாடு உள்ளிட்ட ஐந்து காரணிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பொதுமக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குடிமராமத்து திட்டத்தின் கீழ் நீர்நிலைகளை புனரமைத்து பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், மாவட்டத்தில் பசுமை புரட்சியினை ஏற்படுத்திடும் நோக்கில் மார்ட்டின் சேரிடபிள் டிரஸ்ட் அமைப்புடன் ஒருங்கிணைந்து 72 மணி நேரத்தில் 1.20 கோடி விதைகளை பயன்படுத்தி 30 இலட்சம் விதை பந்துகள் உருவாக்கிடும் நிகழ்வு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்ட சுற்றுச்சூழலுக்கு உகந்த சீதாப்பழம், கொய்யப்பழம், விளாம்பழம், சரக்கொன்றை, மயில்கொன்றை மற்றும் பூவரசம் ஆகிய 6 விதமான விதைகள் பயன்படுத்தப்பட்டு விதைப்பந்துகள் உருவாக்கப்படுகின்றன. இயற்கையோடு இணைந்த மனித வாழ்விற்கு நீர், நிலம், சுற்றுச்சூழல் வளத்தினை மேம்படுத்தி பசுமையான சூழ்நிலையை ஏற்படுத்திட வேண்டும். மிகச்சிறப்பு வாய்ந்த இந்த நிகழ்வினை எலைட் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் (United States LLC), ஏசியன் ரெக்கார்ட்ஸ் அகாடமி (United Arab Emirates), இந்தியா ரெக்கார்ட்ஸ் அகாடமி மற்றும் தமிழன் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் எனும் 4 உலக சாதனை நிறுவனங்கள் நேரில் ஆய்வு செய்து சான்றளிக்கவுள்ளனர் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில், இராமநாதபுரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அறிஞர் அண்ணா நடுநிலைப்பள்ளி, வள்ளல்பாரி நடுநிலைப்பள்ளி, நேஷனல் அகாடமி கல்விக்குழுமத்தைச் சார்ந்த பள்ளிகள், முத்துப்பேட்டை கௌசானல் கலைக்கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களைச் சார்ந்த 2500 மாணவ, மாணவியர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர்/திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.மா.பிரதீப்குமார்,இ.ஆ.ப., அவர்கள், மார்ட்டின் சேரிடபிள் டிரஸ்ட் மேலாண்மை இயக்குநர் முனைவர் லீமாரோஸ் மார்ட்டின், இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர் என்.ஒ.சுகபுத்ரா,இ.ஆ.ப., முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் அ.புகழேந்தி, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் திரு.நாகராஜன், நேஷனல் அகாடமி பள்ளியின் தாளாளர் முனைவர் சையது அப்துல்லா, சையது அம்மாள் பொறியியல் கல்லூரியின் செயலாளர் முனைவர் சின்னத்துரை அப்துல்லா உட்பட அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**